<u>தொழிலாளர் நீதிமன்றம். காஞ்சிபுரம்</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **CP.No.** | : | 26/2025 | சாட்சியம் | : | **PW1** |
| **Name** | : | திரு.விஜய் | | | |
| **Date** | : | **11.05.2026** | | | |
| **Time** | : | **12.19 p.m to 12.33 a.m** | | | |

<u>ம.த.சா.1.திரு.விஜய் என்பவர் இன்று ஆஜர் செய்யப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார். குறுக்கு விசாரணை</u>

பிரமாண வாக்குமூலத்தில் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் என்ன வேலை செய்தேன் என்ற விவரத்தை சொல்லி உள்ளேனா என்றால் தெரியவில்லை. நான் என்ன வேலை செய்து வந்தேன் என்றால் Part Loading செய்து வந்தேன். எதிர்மனுதாரர் நிறுவனத்தில் 120 பேர் நிரந்தர பணியாளராக இருந்ததாகவும் அதில் 70 பேர் மேலாளர், மேற்பார்வையாளர் போன்ற உயர் அதிகாரிகளாக பணியாற்றியதாக கூறி உள்ள நிலையில் நானும் அந்த உயர் அதிகாரிகளில் உள்ளடங்குவேன் என்றால் இல்லை. OP.33/2021 வழக்கின் முழு விவரம் தெரியாது. நான் தாக்கல் செய்திருக்கும் இந்த வழக்கின் முழு விவரம் தெரியுமா என்றால் தெரியும். இந்த வழக்கின் முன் எழு உரிமை OP.33/2021 வழக்கின் தீர்வம் மூலமாக எழுவதாக நான் சொல்லி உள்ள நிலையில் என்னுடைய கவனத்திற்கு தெரியாமல் OP.33/2021 தாக்கல்

செய்யப்பட்டதா என்றால் இல்லை. இந்த மனுவில் என்ன பரிகாரம் கேட்டு உள்ளேன் என்றால் சம்பள நிலுவை தொகை கேட்டு உள்ளேன். சம்பள நிலுவை தொகையாக ரூ.17,96,165/- கேட்டு உள்ளேன் என்றால் ஆமாம். பணியில் இருந்து நீக்கப்பட்டதில் இருந்து இன்றைய தேதி வரை வேறு வேலை செய்து வருகிறேனா என்றால் இல்லை. எனக்கு பணி நீக்கத்திற்கு பின்னர் எந்த வகையில் வருமானம் வருகிறது என்றால் வருமானம் எதுவும் இல்லை. OP.33/2021 வழக்கில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவிற்கு எதிராக Writ மனு நிலுவையில் இருக்கும் காரணத்தினால் நான் தொழிலாளி என்ற வரையறைக்குள் வருவேனா என்பதை பொருத்து இறுதி நிலை எட்டாத காரணத்தினால் மனு நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

Typed to my dictation, read over to interpreted to the witness and acknowledged by him to be correct.
Sd/-S.Sujatha,
Presiding Officer,
Labour Court, Kancheepuram.
Dated:11.05.2026.